1969 மார்ச் 5]

திரு. கே. விநாயகம் : நம்முடைய சர்க்கார் மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வந்தால், அதை நாங்கள் எதிர்க்கப்ப போவதில்லை. ஆயினும் சர்க்காருக்கே தெரியும். என்.சி.சி. பயிற்சி பெற்றவர்களைத்தான் இந்திய மிலிடரி அகாடமியில் சேர்த்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. நம் முடைய மாநிலத்தில் என்.சி.சி.யில் பயிற்சி பெற்றவர்கள் நல்ல பரிசுகள் எல்லாம் பெற்று பெரிய உத்தியோகங்களை மிலிடரியில் வகித்து வரு கிறார்கள். தற்போது மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வருவதன் காரண மாக அதற்கு அகில இந்திய ரீதியில் ரெகக்னிஷன் கிடைக்காத நிலையில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த வாலிபர்களுக்கு வரவேண்டிய வாய்ப்புக் களைச் சர்க்கார் கெடுத்து விடுகிறது அல்லவா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப் பாதகம் ஏற்படக்கூடாது என்ற முறையில் தமிழக அரசு எடுத்துக் கொள்ளுகின்ற முயற்சி களுக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : என். சி. சி. படையில் இந்தி ஆணைச் சொற்களை நீக்க அவர்கள் இணங்காத நிலையில் உடனடியாக ஏன் மாற்றுத் திட்டத்தை அமல் நடத்தவில்லை ? ஒவ்வொரு விஷயத்திலும் செய்யப்படும், செய்யப்படும் என்று கூறி காலந் தாழ்த்திக் கொண்டே செல்லுவதுபோல் இதிலும் கடந்த ஓராண்டுக் காலமாக ஒன்றும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாததால், அந்தத் துறையிலே உள்ளவர் களுக்கு வேலையில்லாமையும், மாணவர்களுக்கு உற்சாகம் குன்றுகின்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு விஷயத்திலும் "யோசிக் கிறேன்" என்று சொல்லிக் காலம் தாழ்த்திக் கொண்டு செல்லுவது போல் இதிலும் சொல்லிக் கொண்டிராமல் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகுதிரு. மு. கருணாநிதி: எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய விருவிருப்பை நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக் கொண்டு விரைவில் மாற்றுத் திட்டத்தைத் தொடங்கும்.

Token strike by Central Government employees

* 168 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Central Government requested the State Government to release its personnel to man the essential services during the token strike by the Central Government employees on 19th September 1968?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : மத்திய சர்க்கார் ஊழியர்கள் மீது வழக்குப்போடப்பட்டுள்ளதா? அந்த வழக்குகளை வாபஸ் வாங்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : இது, "மாநில அரசு ஊழியர்களை உதவி செய்யவேண்டுமென்று மத்திய அரசு மாநில அரசைக் கேட்டதா ?" என்ற கேள்வியாகும். "வழக்கு வாபஸ்" பற்றிய பிரச்சினை இதிலே எழவில்லை.

திரு. ம. பொ. சிவஞானம் : மத்திய அரசு ஊழியர்களுடைய அடையாள வேலைநிறுத்தத்தை ஒடுக்க மத்திய அரசு அவசரச் சட்டம் பிறப்பித்ததைப் பற்றி இந்த மாநில அரசாங்கத்துடன் முன்னதாகக் கலந்து கொள்ளப்பட்டதா ? இல்லையென்றால், அதற்காக மத்திய அரசுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : மாநில அரசை அவர்கள் கலந்துகொள்ளவில்லை. அப்போதே மாநில அரசு அதற்காகத் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்தது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அப்படியானால் அப்போது மாநில அரசு ஊழியர்கள் அனுப்பப்படவில்லையா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்போது நடைபெற்ற கிளர்ச்சியின் போது மாநில அரசின் சார்பாகப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டது. பாதுகாப்புக்கான எல்லா வகையான ஏற்பாடுகளும் மாநில அரசின் சார்பாக செய்யப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : 1968 செப்டம்பர் திங்கள் 19-ம் தேதி வேலை நிறுத்தத்தின் காரணமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருக்கும் மத்திய அரசு ஊழியர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ள நம்முடைய தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அது பற்றி மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறது.

மதுராந்தகம் வட்டத்தில் நிலமில்லா விவசாயிகள்

*169 வினா : **திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மதுராந்தகம் வட்டத்தில் 1965, 1966, 1967-ம் ஆண்டுகளில் முறையே நிலமில்லாத எத்தனை விவசாயிகளுக்குப் பட்டா வழங்கப் பட்டுள்ளது ?

(இ) பட்டா வழங்கியதில் தவறுகள் ஏற்பட்டிருப்பது குறித்து அரசினருக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :

(அ) 1965—37 பட்டாக்கள்.
1966—31 பட்டாக்கள்.
1967—636 பட்டாக்கள்.

(இ) எந்தவிதமான புகாரும் அரசுக்கு வரவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : 1965-ல் 37 பட்டாக்களும், 1966-ல் 31 பட்டாக்களும் கொடுத்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். 1965–66-ல் வழங்கப்பட்ட பட்டாக்களில் நிலம் உள்ளவர்களுக்கும் வழங்கப் பட்டிருப்பதாகவும், அதன்பேரில் இன்னும் சில நிலங்களை அதிகாரிகளே பட்டா செய்து கொண்டு கடனும் வாங்கப்பட்டிருப்பதாகவும், நிலம் இல்லாத ஏழை விவசாயிகள் வெளியேற்றப்பட்டிருப்பதாவும் புகார்கள் வந்திருக்கின்றனவா ? அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட்டது ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைத் தெளிவாகக் கேட்டிருக்கவேண்டும். 1965–66 ஆண்டு விவகாரம் முந்திய அரசாங்கத்தைப் பொறுத்தது. அப்போது ஏதேனும் தவறுகள் நடந்திருக்குமானால் அதற்குப் பரிகாரம் தேட வாய்ப்பு இருக்கிறது. புதிய அரசு வந்த பிறகு 1967-ம் வருஷத்தில் 636 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1965-ல் 37 பட்டாக்களும், 1966-ம் ஆண்டில் 31 பட்டாக்களுமே வழங்கிய நிலை அது அப்போது சிராக நடைபெறவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. புகாரைப் பொறுத்தவரையில் என்ன புகார் வந்தாலும் நியாயமான புகாராக இருக்குமானால், நிச்சயமாக அரசாங்கம் அதற்கான பரிகாரத்தைத் தேடித் தரும்.

திரு. கா. வேழவேந்தன் : முன்பு இருந்த நிலை மாறி புதிய அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு மூன்று அம்சத் திட்டம் என்று செங்கற